ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. அறிவிப்பு

தே.மு.தி.க. உறுப்பினர்களுக்கு மானியக் கோரிக்கை விவாதத்தில் பிற்பகுதியில் உரையாற்றும் வாய்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைமீது விவாதம். பேரவையின் உறுப்பினர்கள் உரையாற்றுகையில் பேரவை விதி 90-க்குட்பட்டு உரையாற்ற வேண்டும். பேரவையின்முன் ஆய்வில் உள்ள பொருள் குறித்து இருக்க வேண்டும். மானியக் கோரிக்கைமீதான விவாதம் உள்ளிட்ட விவாதங்களில் தே.மு.தி.க. உறுப்பினர்கள் பங்கேற்று உரையாற்றுகிறபோது போதிய நேரம், அதிகமான நேரம் ஒதுக்கப்படுகிறது. இருந்தாலும், தே.மு.தி.க. உறுப்பினர்கள் தினந்தோறும் அவர்கள் பேச வேண்டிய அனைத்தையும் பேசிவிட்டு, பேச நேரம் ஒதுக்கப்படுவதில்லை எனக் கூறி இறுதியில் வெளிநடப்புச் செய்வதை வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அரசின்மீது ஆதாரமில்லாமல் ஒரு குற்றச்சாட்டைக் கூறும்போது அதுசம்பந்தமாக அரசின் நிலை குறித்து மாண்புமிகு அமைச்சர்

@ 169 முதல் 210 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2013 ஏப்ரல் 9

பெருமக்கள் விளக்கம் அளிப்பது மரபு. கடந்த ஆட்சியிலே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபொழுது உரையாற்றுகையில் அன்றைய முதலமைச்சர் உட்பட அமைச்சர்கள் 65 முறை குறுக்கிட்டுள்ளனர். எனவே, தே.மு.தி.க. உறுப்பினர்கள் அதிகமான நேரம் உரையாற்றிவிட்டு, வெளியிலே சென்று போதிய நேரம் ஒதுக்குவதில்லை என்று சொல்லும் செயல்பாடு எவராலும் ஏற்றுக்கொள்ள இயலாது. எனவே, பிற எதிர்க்கட்சித் தலைவர்களைக் கலந்தாலோசித்து அவர்கள் ஒப்புதலுடன் பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்கள், இன்று முதல், மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தில், பிற்பகுதியில் உரையாற்றுவார்கள் என்பதைப் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் சிலர் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதத்தை முதலில் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.(குறுக்கீடுகள்) அதெல்லாம் இல்லை. உங்களுக்கு வாய்ப்பு கொடுத்தாகிவிட்டது. உங்கள் வாய்ப்பை நீங்கள் misuse பண்ணுகிறீர்கள். சரியாகப் பயன்படுத்துவதில்லை. (குறுக்கீடுகள்) அதனால் இதை பிற எதிர்க்கட்சித் தலைவர்களைக் கலந்து ஆலோசித்துதான் செய்திருக்கிறேன். இதை எல்லாம் என்னுடைய அறையில் வந்து விவாதியுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். இறுதியாகப் பேசலாம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லையென்றால் வேறு வழியில்லை. இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிதான் வரும். உட்காருங்கள். அதெல்லாம் ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்) இதில் மாற்றமில்லை. உட்காருங்கள். இதற்கு முன்பிருந்தவர்கள், மற்றவர்கள் இப்படியா செய்தார்கள்? மற்ற எதிர்க்கட்சிகள் இப்படிச் செய்யவில்லை. பேசிவிட்டு, போதிய நேரம் கொடுக்கவில்லை என்று கூறி கடைசியில் வெளிநடப்புச் செய்வது என்ன நியாயம்? (குறுக்கீடுகள்) ஆகவே, இது முறையில்லை. இது முறையில்லை. உட்காருங்கள். இனி கடைசியாகத்தான் உங்களைப் பேச அனுமதிக்கப் போகிறேன். (குறுக்கீடுகள்) முதலில் நீங்கள் பேசுவதற்கு வாய்ப்பில்லை. ஏனென்றால், நீங்கள் அவையினுடைய நேரத்தை வீணடிக்கிறீர்கள்.

2013 ஏப்ரல் 9] [பேரவைத் தலைவர்]

அவையினுடைய நேரத்தை வீணடிப்பது மட்டுமல்ல, மற்ற உறுப்பினர்களுடைய நேரத்தையும் எடுத்துக்கொள்கிறீர்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தே.மு.தி.க. கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நீங்கள் முதலில் பேச வாய்ப்பளிக்கின்றீர்கள். அவர்கள் தங்களுக்குக் கொடுத்த வாய்ப்பை ஒழுங்காக முறையாகப் பயன்படுத்தாமல் தினந்தோறும் வேண்டுமென்றே குதர்க்கமான கேள்விகளைக் கேட்டுக்கொண்டு, தினந்தோறும் 45 நிமிடங்கள் அல்லது ஒரு மணி நேரம்வரை சபையினுடைய விலைமதிக்க முடியாத நேரத்தை மதிக்காமல், அவர்கள் மிகவும் முறைகேடாக தொடர்ந்து நடந்துகொள்ளும் அளவில் அவர்களது நடவடிக்கை இருக்கிறது. பேசி முடித்த பிறகு அனைவரும் ஒட்டுமொத்தமாக வெளிநடப்புச் செய்கிறார்கள். அவர்களாக எழுந்து போய்விடுகிறார்கள். இது நல்ல நடைமுறை அல்ல, மரபும் அல்ல. அதனால் இதற்கு ஒரு நல்ல தீர்வு வேண்டுமென்பதற்காகத்தான் அனைத்துக் கட்சிகளினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர்களுடன் கலந்து பேசி ஒரு முடிவு எடுத்தோம். (குறுக்கீடுகள்) நீங்கள் பொறுமையாக இருங்கள். இருந்து உங்களுடைய கருத்துகளை இறுதியில் பதிவு செய்யுங்கள். உங்களுடைய நடைமுறையே சட்டமன்ற மரபுகளுக்கு, விதிகளுக்கு முரணாக அமைந்ததனால் இந்த முடிவை அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்களுடனும் கலந்து பேசி எடுக்க வேண்டியதொரு சூழல் ஏற்பட்டது என்பதை நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள். (குறுக்கீடு) இல்லை, பதில் எல்லாம் ஒன்றும் கிடையாது, உட்காருங்கள். உங்களுக்குத் தலைவர் யார்? உட்காருங்கள்.*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவை முன்னவர் சொல்லியாகிவிட்டது. எல்லாவற்றையும் பேசியாகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

[2013 ஏப்ரல் 9

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வளம் மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு . . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். உட்காரவில்லையென்றால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். எல்லோரும் உட்காருங்கள். நான் நிற்கிறேன் அல்லவா, நீங்கள் உட்காருங்கள். இதற்கு மேல் உங்களுக்கு வாய்ப்பில்லை. எல்லாம் பேசியாகிவிட்டது. அவை முன்னவர் தெளிவாக விளக்கத்தைச் சொல்லிவிட்டார். அவையினுடைய நேரத்தை நீங்கள் வீணடிக்கிறீர்கள். மற்ற உறுப்பினர்களுடைய நேரத்தையும் வீணடிக்கிறீர்கள். ஆகவே, சர்வ கட்சித் தலைவர்களையும் கலந்தாலோசித்துத்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த முடிவிற்குக் கட்டுப்பட்டு இறுதியாக நீங்கள் உரையாற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

6. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

கோரிக்கை எண் 8 – பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)—*தொடர்ச்சி*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வளம் மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் மேற்கு வங்க மாநிலத்தில் நாடு விடுதலை பெற்ற காலத்திலிருந்து (குறுக்கீடு) மாணவர்களின் அமைப்புகளுடைய (குறுக்கீடுகள்) தேர்தல் என்பது அடிப்படை உரிமை என்ற வகையிலே இருந்து வந்தது இன்றைக்கு அந்த மாநில அரசாங்கத்தால் அது ரத்துச் செய்யப்பட்டு, அதை எதிர்த்து கிளர்ந்தெழுந்த மாணவர்களுடைய எழுச்சிமிக்கப் போராட்டத்தில் அந்த மாநிலத்தில் காவல் துறையின் கொடூரமான தாக்குதலுக்கு பலியாகியிருக்கக்கூடிய இளம் இந்திய மாணவ சங்கத்தினுடைய தோழர் சுதீப் அவர்களுக்கு வீரவணக்கத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*